செய்தி வெளியீடு எண்: 209 நாள்: 03.04.2013

# “கலைச் செம்மல் விருது”

# செய்திக் குறிப்பு

கலை பண்பாட்டுத்துறையின் நேரடி கட்டுப்பாட்டில் செயல்படும் தமிழ் நாடு ஓவிய நுண்கலைக் குழு மூலம் தமிழ்நாட்டினை சார்ந்த மரபுவழி, நவீனபாணிக் கலைப் பிரிவுகளில், புகழ்பெற்ற ஓவிய, சிற்பக் (நுண்கலைத்துறையில்) கலை வல்லுநர்கள் அவரவர் துறைகளில் புரிந்துவரும் அரிய சாதனைகளைப் பாராட்டும் வகையிலும், அவர்களை ஊக்கப்படுத்தும் வகையிலும், தமிழக அரசால் **கலைச்செம்மல் விருதுகள்** வழங்கப்பட்டு வருகிறது. விருது பெறும் கலைஞர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.20,000/–க்கான காசோலையும், செப்புப்பட்டயம் மற்றும் பாராட்டிதழும் வழங்கி கௌரவித்து வரும் சிறப்பான பணியினை கலை பண்பாட்டுத்துறை செய்து வருகிறது. இதுவரை மரபுவழிப்பிரிவில் 11 ஓவிய, சிற்பக் கலை வல்லுநர்களுக்கும், நவீனபாணிப் பிரிவில் 42 ஓவிய, சிற்பக் கலை வல்லுநர்களுக்கும் என 53 கலைஞர்களுக்கு கலைச்செம்மல் விருதுகள் தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது.

2008–2009 மற்றும் 2009–2010 ஆம் ஆண்டுகளுக்கு மரபுவழி, நவீனபாணி கலைப்பிரிவுகளில் கலைச்செம்மல் விருதிற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள மூன்று நுண்கலை வல்லுநர்களுக்கு 4.4.2013 அன்று சென்னை அரசு அருங்காட்சியக் கலையரங்கில் நடைபெறவுள்ள விழாவில், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் **டாக்டர் வைகைச் செல்வன்** அவர்களால் கலைச்செம்மல் விருதுகள் வழங்கி, கௌரவிக்கப்படுகின்றனர்.

**2008–2009**

1. திரு சி.தட்சிணாமூர்த்தி – நவீனபாணி
2. திரு க.தட்சிணாமூர்த்தி – மரபுவழி

**2009–2010**

1. திரு த.பாஸ்கரன் – மரபுவழி

**திரு சி.தட்சிணாமூர்த்தி – நவீனபாணி கலைஞர்**

சென்னை அரசு கவின் கலைக் கல்லூரியில் பயின்று, பின் அதே கல்லூரியில் முதுநிலை விரிவுரையாளராக பணிபுரிந்தவர். இவர் புதுதில்லி லலித் கலா அகாதமியின் தேசிய விருது, சித்திரகலா விருது, மாநில அரசு விருது, மைசூர் தசரா விருது போன்ற விருதுகளை பெற்றவர். இவரது பல்வேறு கலைப்படைப்புகள் சென்னை லலித் கலா அகாதமி, புதுதில்லி லலித் கலா அகாதமி, சென்னை தேசிய கலைக்கூடம் ஆகிய இடங்களில் இன்றளவும் காட்சிகளாக வைக்கப்பட்டுள்ளது அன்னாரின் தனிச்சிறப்பாகும்.

**திரு க.தட்சிணாமூர்த்தி – மரபுவழி கலைஞர்**

மாமல்லபுரம் அரசினர் கட்டட மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியின் மாணவர். பின் அதே கல்லூரியில் விரிவுரையாளராக பணிபுரிந்தவர். இவர் மாநில அரசின் விருதுகளும், சிற்பக் கலாமணி விருதும், சிற்பகலா இரத்தினம் விருது போன்ற பல விருதுகளை பெற்றவர். இவர் கோயில் கட்டடக்கலையில் மிகச் சிறந்தவர் என்பதால் திருப்பதி தேவஸ்தான கலைப்பிரிவில் பாடத்திட்ட ஆலோசகராகவும் இருந்துள்ளார். தமிழகத்திலும், பிற மாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் பல கோயில்கள் அன்னாரின் கைவண்ணத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

**திரு த.பாஸ்கரன் – மரபுவழி கலைஞர்**

மாமல்லபுரம் அரசினர் கட்டட மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியின் மாணவர். பின் அதே கல்லூரியில் விரிவுரையாளராக பணிபுரிந்தவர். இவர் கற்சிற்பத்தில் புலமை பெற்றவர். மாநில அரசின் விருதுகளும், சிற்பக் கலைஞர்களுக்கு வழங்கப்படும் விருதான பூம்புகார் விருதினை பெற்றுள்ளார். இவர் பல்வேறு கோவில்களுக்கு கடவுள் சிலைகளையும், கோயிலின் முகப்புகளையும் அமைத்துள்ளார். சிங்கப்பூர், மலேசியா, அயர்லாந்து போன்ற நாடுகளில் உள்ள கோயில்களில் இவர் வடிவமைத்த கடவுள் சிற்பங்கள் உள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**